நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண்: STC 865–2025

வழக்கு சாட்சி : PW 1 (LW 1)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரஞ்சித் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | ரத்தினம் | | : | |
| கிராமம் | : | கோகூர் | வயது | : | 47 / 2026 |
| தாலுக்கா | : | கீழ்வேளூர் | | | |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **02.06.2026**

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு நான் நாகப்பட்டினம் டவுன் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிசெய்து கொண்டிருந்தபோது, கடந்த 28.10.2024 ம் தேதி உதவி ஆய்வாளர் கனகராஜ் மற்றும் தலைமை காவலர் ரமேஷ் ஆகியோர்களுடன் நானும் சேர்ந்து சுமார் காலை 11.00 மணிக்கு சென்றோம். அப்போது புத்தூர் ரவுன்டான முச்சந்தியில் சுகுமாரன் என்பவர் தமிழக வெற்றி கழகத்தின் கட்சி தலைவர் விஜய் பேனரை விக்கிரவாண்டி மாநாட்டு அழைப்பிதழ்காக வைத்துக்கொண்டிருந்தார்.

2. அந்த பேனரானது போக்குவரத்திற்கு இடையூராக இருந்தது. நாங்கள் பலமுறை கூறியும் அவர்கள் அந்த பேனரை அகற்றவில்லை. அந்த பேனரானது 12 அடி அகலம் X 10 அடி நீளம் கொண்ட டிஜிட்டல் பிளக்ஸ் பேனர் ஆகும். அதன்பிறகு உதவி ஆய்வாளர் கனகராஜ் அவர்கள் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. 28.10.2024 ம் தேதியன்று தி.மு.க கட்சி ஆட்சி தான் இருந்தது என்றால் சரிதான். எதிரி சுகுமாரன் என்பவர் த.வெ.க. கட்சியின் நாகபட்டின மாவட்ட செயலாளராக

இருந்தார் என்றால் சரிதான். நீங்கள் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோது நீங்கள் சொன்ன நேரத்தில், சொன்ன நாளில் உதவி ஆய்வாளருடன் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் காவல் நிலைத்தில் வைத்து உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அவர் எதிரி மீது பொய்யான புகாரை உருவாக்கி அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

2. விக்கிரவாண்டி மாநாட்டிற்கு பெரிய அளவில் கூட்டமானது நாக்கப்பட்டினத்திலிருந்து சென்றது என்ற விவரம் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். த.வெ.க கட்சியின் வளர்ச்சியை தடுப்பதற்காக தி.மு.க கட்சியின் கொடுத்த அழுத்ததின் காரணமாக பொய்யான வழக்கு உதவி ஆய்வாளரால் போடப்பட்டு அதனடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கீறிர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது. பொய்யாக சாட்சியம் அளிக்கீறிர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சம்பவ தேதியன்றும், சம்பவ நேரத்திலும் பணியில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியை சம்பந்தப்படுத்தி பொய்யாக அவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் முதல் விசாரணையில் கூறியது போல் சம்பவ இடத்தில் பிளக்ஸ் போர்ட் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்குச் எடுத்து சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.06.02 16:55:36 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
நாகப்பட்டினம்.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண்: STC 865-2025

வழக்கு சாட்சி : PW2 (LW2)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | காசிநாதன் | | : | |
| கிராமம் | : | நாகப்பட்டினம் நகர காவல் நிலையம் | வயது | : | 48/ 2026 |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **02.06.2026**

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 28.10.2024ம் தேதியன்று சுமார் 11.00 மணியளவில் நான், உதவி ஆய்வாளர் கனகராஜ் மற்றும் தலைமை காவலர் ரஞ்சித் ஆகியோர்கள் புத்தூர் ரவுன்டானா முச்சந்தியில் வடமேற்கு திசையில் டிராபிக்கை அப்புறப்படுத்திகொண்டு இருந்தோம். சுமார் 12 அடி அகலம் X 10 அடி நீளம் கொண்ட சுகுமார் என்பவரின் புகைப்படம் ஒட்டப்பபட்ட த.வெ.க கட்சியின் பிளக்ஸ் போர்ட்டு வடமேற்கு திசையின் புத்தூர் முச்சந்தியில் இருந்தது. போக்குவரத்திற்கு இடையூறாக இருந்ததால், அதை அப்புறப்படுத்த சொல்லி உதவி ஆய்வாளர் மற்றும் நானும், ரஞ்சித்தும் அருகில் இருந்த பிளக்ஸ் போர்ட்டு வைத்திகொண்டிருந்த நபரிடம் கேட்டோம்.

2. அப்போதும் அந்த பிளக்ஸ் போர்ட்டை சுகுமாரிடம் அலைபேசி மூலம் அகற்ற சொல்லி கேட்டோம். பின்பு நான் மட்டும் காவல் நிலையம் திரும்பி வந்து விட்டேன். பிளக்ஸ் போர்ட்டை அகற்றவில்லை. அதனால் உதவி ஆய்வாளர் எதிரி சுகுமாரன் மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. 28.10.2024 ம் தேதியன்று தி.மு.க கட்சி ஆட்சி தான் இருந்தது என்றால் சரிதான். எதிரி சுகுமாரன் என்பவர் த.வெ.க. கட்சியின் நாகபட்டினம் மாவட்ட செயலாளராக இருந்தார் என்றால் சரிதான். நீங்கள் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோது நீங்கள் சொன்ன நேரத்தில், சொன்ன நாளில் உதவி ஆய்வாளருடன் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் காவல் நிலையத்தில் வைத்து உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அவர் எதிரி மீது பொய்யான புகாரை உருவாக்கி அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

2. விக்கிரவாண்டி மாநாட்டிற்கு பெரிய அளவில் கூட்டமானது நாக்கப்பட்டினத்திலிருந்து சென்றது என்ற விவரம் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். த.வெ.க கட்சியின் வளர்ச்சியை தடுப்பதற்காக தி.மு.க கட்சியின் கொடுத்த அழுத்ததின் காரணமாக பொய்யான வழக்கு உதவி ஆய்வாளரால் போடப்பட்டு அதனடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது. பொய்யாக சாட்சியம் அளிக்கீறிர்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் பிளக்ஸ் போர்ட் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சம்பவ இடத்திற்கு செல்லாததால் தான் உங்கள் முதல் விசாரணை வாக்குமூலமும், பிரிவு 180(3) BNSS வாக்குமூலமும் வெவ்வேறாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த நேரத்தில் நீங்கள் பணியில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரியை சம்பந்தப்படுத்தி பொய்யாக அவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்குச் எடுத்து சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.06.02 16:55:49 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
நாகப்பட்டினம்.